# DEPOSTITION OF WITNESS

## IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT MUNSIF, NAGERCOIL

## O.S. No. 346 of 2015

**Deposition of the Witness : PW2**

Solemnly Affirmed by Thiru/Tmt. Bench Clerk in accordance with the provision of Act X of 1873.

| | | |
|---|---|---|
| Name | : | ரமணி |
| Father's Name / Husband's name | : | மாரியப்பன் |
| Village | : | நீண்டகரை பி |
| Taluk | : | அகஸ்தீஸ்வரம் |
| Calling | : | VAO |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 30.04.2026 |

**முதல்விசாரணை.**

நான் இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பெயரில் சாட்சியம்

அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது நீண்டகரை பி வில்லேஜில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் அனைத்தும் எனது அலுவலகத்திலிருந்து வாதிக்கு கொடுக்கப்பட்ட நிலவரி ரசீது என்றால் சரிதான். **மேற்படி நிலவரி ரசீதுகள் எண்ணம் 5 வாசாஆ 24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் 2015 முதல் 2025 வரை வழக்கு பட்டிகை ரசீது வாதி நிலவரி செலுத்தியதற்கான எங்கள் அலுவலகத்திலிருந்து கொடுக்கப்பட்ட ரசீதுகள் என்றால் சரிதான்.

தற்போது உள்ள வருவாய் துறை பசலி ஆண்டு 1435 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தற்போதைய பசலி ஆண்டிற்கான வழக்கு பட்டிகை சொத்தின் ரசீது என்றால் சரிதான். **மேற்படி 1435 பசலி ஆண்டுக்கான ரசீது வாசாஆ 25 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வாதி எந்த ஆண்டிலிருந்து வழக்கு பட்டிகை சொத்திற்கு நிலவரி செலுத்தி வருகிறார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நான் பணிக்கு வந்து 1 வருட காலம் தான் ஆகிறது. வாதிக்கு வழக்கு பட்டிகை சொத்திற்கு நிலவரி செலுத்தக்கூடாது என்று கூறி நாளது தேதி வரையிலும் எங்கள் அலுவலகத்தில் உயர் அதிகாரிகளால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இல்லை என்றால் சரிதான்.

மேற்படி உத்தரவு இல்லாத காரணத்தினால் தான் வாதி தற்போதும் நிலவரி செலுத்தி வருகிறார் என்றால் பட்டாவில் பெயர் உள்ளதால் நிலவரி செலுத்தி வருகிறார். பட்டாவில் பெயர் இருந்தும் உயர் அதிகாரிகள் நிலவரி ரசீது செலுத்தக்கூடாது என்று கோரி உத்தரவு பிறப்பித்திருந்தால் நிலவரி வாங்க இயலாது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**